# விடியல்

The Dawn

இதழ்-108, ஏப்ரல் -2018



**கௌரவ ஆசிரியர்**

**முனைவர் வே. இராதாகிருஷ்ணன்**

கல்லூரி முதல்வர்

**ஆசிரியர்**

**முனைவர் சி.ரா.சுரேஷ்**

தமிழ்த்துறைத்தலைவர்

**இணையாசிரியர்**

**முனைவர் ப.பிரதீபா**

தமிழ் உதவிப்பேராசிரியர்

**ஆசிரியர் குழு**

திருமதி. சு.சாந்தி
முனைவர் கோ.இரவிச்சந்திரன்
திரு. செ.தங்கராஜ்
திரு.மு.சதீஸ்குமார்
முனைவர் சு.முப்பிடாதி
திரு. மு.சத்தியராஜ்
முனைவர் ப.சிலம்பரசன்
திரு. ந.சரவணன்
திரு ஆ.கௌரிசங்கர்
திரு. சி.கிருஷ்ணமூர்த்தி
திரு. து.சூசைபிரகாசம்
திரு. ரா.தர்மதுரை
செல்வி. மா.சத்தியப்பிரியா
திருமதி கொ.சத்தியா
திருமதி கா.வெண்ணிலா


## உலக புத்தக தினம் - ஏப்ரல் 23

"தேடிப்படி தேர்ந்துபடி தேரப்படி
உயரப்படி உயர்ந்ததைப்படி உயரும்படி"

என்பது ஆன்றோர் வாக்கு. புத்தக வாசிப்பே மனிதனை பண்படுத்தும். மனிதன் நாகரிகம் மற்றும் பரிணாம வளர்ச்சியடைய பகுத்தறிவே துணைபுரிகிறது. பகுத்தறிவு வளர்க்கும் காரணியாக வாசிப்பு திகழ்கிறது. நம் அறிவின் ஊற்றாக விளங்குவது புத்தகங்களே. புத்தகங்களைப் பொக்கிஷமாகப் பாதுகாத்து வைப்பதும், எதிராளிகள் புத்தகங்களை அழிப்பதும் பல நூற்றாண்டுகளாக சமூகம் கண்டு வரும் நிகழ்வு.

உலகில் முதன்முதலில் ஸ்பெயின்நாட்டின் கட்டலோனியாவில் புத்தக தினம் கொண்டாடப்பட்டது.


© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)

வெளியீடு:

**தமிழ்த்துறை**

**கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி(தன்னாட்சி)**
**திருச்செங்கோடு-637 215. தமிழ்நாடு, இந்தியா.**

**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal
**Blog:** ksrcasthamizh.blogspot.in **E-mail:** vidiyalmagazhine@gmail.com
**Website:** ksrcas.edu

KSR COLLEGE OF ARTS AND SCIENCE
I N D I A
Knowledge is Power



All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publisher

இங்கு ஆண்களும் பெண்களும் புத்தகங்களையும் ரோஜா மலரையும் பரிசுகளாகப் பரிமாறிக் கொண்டனர். புத்தக தினம் கொண்டாட வேண்டும் என்ற கோரிக்கையை சர்வதேச பதிப்பாளர்கள் சங்கம் முன்வைக்க, ஸ்பெயின் நாட்டு அரசு யுனெஸ்கோ அமைப்பிற்கு அக்கோரிக்கையை வழிமொழிந்தது. பின்னர் பாரிஸில் நடைபெற்ற 28 -ஆவது யுனெஸ்கோ மாநாட்டின் போது உலக புத்தக தினம் கொண்டாடப்படுவதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. “அறிவைப் பரப்புவதற்கும், உலகெங்கிலும் உள்ள பல்வேறு கலாச்சாரங்கள் பற்றிய விழிப்புணர்வு பெறுவதற்கும், புரிதல், சகிப்புத்தன்மை போன்றவற்றின் மூலம் மனிதர்களின் ஒழுக்கத்தினை மேம்படுத்தவும் புத்தகம் ஒரு சிறந்த கருவியாக உள்ளதால் ஏப்ரல் 23 உலக புத்தக தினமாகக் கொண்டாடப்படும்” என அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டது.

ஏப்ரல் 23 வில்லியம் ஷேக்ஸ்பியர், மிகுவேல் செர்வேண்டிஸ், இன்கா கார்கிலாசோ ஆகியோர் இறந்த தினமும், மொரிஸ் ட்ருவோன், ஹோல்டோர் லக்ஸ்னெஸ், விளாடிமிர் நபோகோவ், ஜோசெப் பிளா, மனுவேல் மெஜியா போன்ற எழுத்தாளர்களின் பிறந்த தினமும் ஆகும்.

வாசிப்புப் பழக்கம் என்பது அருமையான ருசி. ஓர் அழகான பசி. ஒருமுறை சுவைத்துப் பழகிவிட்டால் அது வாழ்நாள் முழுக்கத் தொடரும் ஆனந்தம். வாசிப்பு புதிய உலகத்தைக் காட்டும். பல அரிய தகவல்களை அள்ளித்தரும். சிந்திக்கவும் நற்குணங்களைக் கட்டமைத்தலிலும் வாசிப்புக்கு இன்றிமையாத இடமுண்டு. ஒரு மனிதன் ஆண்டுக்கு 2000 பக்கங்களைப் படித்தால் தான் உலக நடப்புகளை ஓரளவுக்கு அறிந்த மனிதனாக ( Informative man ) கருதப்படுவதாக யுனெஸ்கோ கூறுகிறது.

உலகிலுள்ள உயிரினங்களில் ஆறாவது அறிவுடன் இயங்குவது மனிதன் மட்டுமே. ஆறாம் அறிவான பகுத்தறிவே மனித வளர்ச்சிக்கு அடித்தளமாகிறது. மேலும் மேலும் பகுத்தறிவை கூர்மைபடுத்தும் ஆயுதம் புத்தகம் மற்றும் புத்தக வாசிப்பு எனில் மிகையாகாது. அறிவை வழங்கும் அமுதசுரபியாகப் புத்தக வாசிப்பு திகழ்கிறது. புத்தக வாசிப்பினால் மட்டுமே சுயமாக சிந்திக்கும், முடிவெடுக்கும் தலைமுறையை உருவாக்க முடியும். அறிவைக் கடத்தும் கருவியாக புத்தகங்களும், பாலமாக வாசிப்பும் திகழ்கிறது. நல்ல நூல்கள் மனிதனுக்குச் சிறந்த வழிகாட்டியாகவும், அரவணைக்கும் தாயாகவும், தைரியமூட்டும் தந்தையாகவும் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும் நண்பனாகவும் விளங்குகிறன. நம்மில் மறைந்துள்ள ஆற்றல்களை கண்டறிதல், தெளிவு, சிறந்த அறிவை பெறும் வழிமுறை ஆகியவற்றை பெற வாசிப்புப் பழக்கம் அவசியமாகிறது.

தேடல் இல்லா வாழ்க்கை உப்பில்லா பண்டம் போன்றது. உப்பில்லாத உணவில் சுவையில்லாதது போல் தேடல் இல்லா வாழ்க்கையும் சுவையற்றுப் போகும். இத்தேடலின் மையம் புத்தகங்களில் ஒளிந்துள்ளது. ஒரு புத்தகம் இன்னொரு புத்தகத்திற்கு அழைத்துச் செல்லும். இவ்வறிவுத் தேடல் அடுத்து, அடுத்து எனச் செல்கையில் நம்மையறியாமலே நாம் அறிவாலும் மனதாலும் பண்படுவது உறுதியாகும். வாசிப்பு பண்படுத்துவதோடு நம்மை சான்றோர்களாகவும், சாதனையாளர்களாகவும் மாற்றிக் காட்டும் மாமருந்து.

கண்டதைக் கற்றவன் பண்டிதன் ஆவான் - எனும் பழமொழி வாசிப்பின் இன்றிமையாத் தன்மையைச் சுட்டுகிறது. உலகின் தலைசிறந்த தலைவர்கள், சான்றோர்கள் தத்துவஞானிகள் வாசிப்பைத் தம் உயிராக சுவாசித்தனர். வாசிப்பின் வாயிலாக

உலகை வென்றனர். கற்றலின் தத்துவத்தை 'கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது உலகளவு' என ஔவையார் எளிமையாக கூறி நம்மை வழிநடத்துகிறார். மடமையைச் சுட்டெரிக்கும் கதிராகவும், அறிவொழி பாய்ச்சும் செம்மைபடுத்தும் ஊற்றாகவும் வாசிப்பு திகழ்கிறது.

வாசிப்புப் பழக்கத்தை சிறுவயது முதலே இளைய தலைமுறையினருக்குப் பழக்கப்படுத்த வேண்டும். மதிப்பெண் அடிப்படையில் இன்றைய கல்வி மாறியமதல் வாசிப்பு ஆர்வம் குறைந்துள்ளது. பாடத்திட்டத்திற்கு அப்பால் படிக்கும் மாணவர்களைக் காண்பது அரிதாக உள்ள நிலையை காண்கையில் 'வாசிப்பு பழக்கம் பசியாகவும், ருசியாகவும் இருக்க வேண்டிய நிலைமாறி நம் அடுத்த தலைமுறைக்கு அலர்ஜியாகி விட்டது' எனும் அசோகமித்தரனின் நிதர்சனம் நம்மை சுடுகிறது. வாசிப்பின் நன்மைகளை எடுத்துரைத்து, சிறுவயது முதலே குழந்தகளுக்கு அவர்களாகவே விரும்பிப் படிக்கும்படி நூல்களை வாங்கிக் கொடுப்பதுடன் அவர்களாக புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து வாங்க ஊக்கப்படுத்துவதும் படிக்கத் தூண்டுவதும் நம் இன்றியமையாத கடமையாகிறது.

"தொட்டணைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றணைத் தூறும் அறிவு"

எனும் வள்ளுவரின் வாக்கினை நம் குழந்தைகள் மனத்தில் பதிய வைக்க வேண்டியது அவசியம். வாசிப்பு கல்வி பயிலும் காலத்தோடு நின்று விடுவது அல்ல. நாம் எவ்வளவு உயரத்திற்குச் சென்றாலும் வழிகாட்டியாகத் திகழ்வது புத்தகங்களே. ஆகவே, வாசிப்பை நிறுத்திக் கொள்வது நம் வளர்ச்சியை நிறுத்திக் கொள்வதற்கு ஒப்பானது.

படிப்படியாய்க் கற்போம்
புத்தகம் என்னும்
படிக்கட்டுக்களைப் பயன்படுத்தி
புத்துயிர் பெற்று ஒளிர்வோம்
புதுமனிதனாய் செதுக்குவது
புத்தகங்கள் மட்டுமே...
புத்தகங்களை நேசிப்போம்
நமது நேசிப்பை
வாசிப்பில் வெளிப்படுத்துவோம்.

**இணையாசிரியர்**

# உள்ளுறை

## உலக புத்தக தினம்

கவிதைகள்................................ 7 - 25

பொது அறிவு…………..........26 - 27

பொன்மொழிகள்...........................28 - 29

நடன தினம்………................29 - 30

கவிதைகள்................................30 – 31

புத்தகப் பொன்மொழிகள்….32

# கவிதைகள்

## இருட்டுச் சுதந்திரம்

எழுச்சிக் கொண்டு
பிறந்து விட்டான்
வெறும் தமிழனாக அல்ல
வென்றிடும் தமிழனாக!

பாடுபட்டு உழைக்கின்றோம்
வெறும் பாட்டாளியாக!
பட்டினியுடன் கிடக்கின்றோம்
பட்டதாரியாக!

கால் காசுக்கு விற்றுவிட்டனர்
கல்வியைக்கூட!

காசில்லாமல் தவிக்கின்றோம்
தெருமுனையில் கேரம் போர்டுடன்!

காசுமில்லை! கல்வியுமில்லை!
சோறுமில்லை.

வெறும் சிகரெட் துண்டிற்கும்
சாராய பாட்டிலுக்கும்
அடிமையாகிவிட்டோம்!

தரணியில தமிழைத்
தொலைத்துவிட்டு
இருட்டில் தேடிக் கொண்டிருக்கிறோம்
குருடனாக!

இரா.காவியா
இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## என் சுவாசக் காற்றே

தள்ளி நின்று என் மீது நீ
புன்னகைப் புஸ்பங்களை
அள்ளி வீசியதும்
வில்லை பூட்டிய உனது
விழிக் காமிராவில்
மேலும் கீழும் என்னை
நோக்கி நோக்கி
அச்சுப் பிசகாது
உன்னில் பிரதி செய்ததும்

இன்றும் என் நெஞ்சில்
நிலையாய் நிற்கும்.

ப.நித்யா
இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## வந்தீரோ

பஞ்சம் பிழைக்க வந்தீரோ..
எங்களைப் பஞ்சத்தில்
தள்ள வந்தீரோ...
கொஞ்சி விளையாட
வந்தீரோ...
எங்கள் கோவனத்தை
உருவ வந்தீரோ...
எட்டுத்திசையும் கட்டியாண்டோம்
நீவிர் எங்களைக்
கட்டியாள வந்தீரோ...

வீரத் தமிழர்
வீழ மாட்டோம்!
வீறு கொண்டு எழுந்து விட்டோம்!
விரட்டி அடிக்கவும் முடியாது!

மு. அய்யனார்
இளங்கலைத் தமிழ் மூன்றாம் ஆண்டு

## அம்மா

அம்மா என்ற
மந்திரத்தை தவிர
வேறு எந்த
மந்திரத்தை ஓதினாலும்
வாழ்வில்
வெற்றி பெற முடியாது!
இதை அறியாதவர்கள்
தான்
ஊக்கம் என்னும்
ஊதியத்தைத் தேடி
உழைக்கிறார்கள்.
மூன்று எழுத்து
மந்திரத்தை
உச்சரிக்காத
இந்த மூடர்கள்
முன்னேற முடியாதல்லவா!

ஈ.தாரணி
இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு

## கற்றுக்கொள்

அன்பால் உயர அன்னையிடம் கற்றுக்கொள்
தன்னொழுக்கம் அறிய தந்தையிடம் கற்றுக்கொள்

அறிவை அகிலம் முழுதிலும் கற்றுக்கொள்
காலந் தவறாமையை கதிரவனிடம் கற்றுக்கொள்
சுறுசுறுப்பாக இருக்க எறும்பிடம் கற்றுக்கொள்
கடமை தவறாமையை காற்றிடம் கற்றுக்கொள்
நன்றி மறவாமையை நாய்களிடம் கற்றுக்கொள்
நேர்மையாக இருக்கும் நெறிகளைக் கற்றுக்கொள்
பாசம் என்னவென பாவையிடம் கற்றுக்கொள்
நேசம் மறவாமையை நண்பனிடம் கற்றுக்கொள்
தந்திரம் அறிய நரியிடம் கற்றுக்கொள்
நீ முழுமையடைய நூல்களைக் கற்றுக்கொள்...

**வையகமும் உன்னைப் பார்த்துக் கற்றுக்கொள்ள உன்னை நீயே கற்பித்துக்கொள்...**

இர.சௌமியா
இளங்கலை நுண்ணுயிரியல் முதலாமாண்டு

## நம்பிக்கை துரோகம்

நம்பிக்கை சிறகை
நசுக்கிய தோழனே!

பயிரை மேய்ந்த வேலியாக
பச்ச துரோகம் பாவமடா...!
காவலாக இருந்த நீ
கால்களை வாரிய சோகமடா...!
நிறம் மாறும் பச்சோந்தியும்

குணம் மாற நினைப்பதில்லை...!
பணம் என்னும் பிச்சைக்காக
பழைய பாசம் மறந்தாயடா...!
தேனிருக்கும் மலரென்று
தேர்ந்தெடுத்தேன் நான் உன்னை...!
பூச்சி உண்ணும் பூவென்று
புரியலேயே அப்போது...

மா.தினேஷ்
இளங்கலைத் தமிழ் முதலாம் ஆண்டு

## கண்தானம்

நம் உயிர் உள்ள போது நாம் பார்த்து ரசித்து அனுபவித்ததை
நாம் இறந்த பின்பும் பார்த்து ரசித்து அனுபவிக்க இறைவன்
நமக்கு அளித்த பரிசு தான் கண்தானம்...
பிறர் வாழ்வில் உள்ள இருட்டை நீக்கி

வெளிச்சத்தை தருபவர் கடவுள் என்றால்!
கண்தானம் செய்யும் ஒவ்வொருவரும் கடவுள் தான்.

க.பிரேமிகா
உயிர்த்தொழில் நுட்பவியல் முதலாமாண்டு

## நான் விரும்பும் ஆசான்

அகரம் சொல்லி
கொடுத்தவர் ஒருவர்!

என்னை எழுத்தாளனாகச்
செய்தவர் ஒருவர்!

உருவமில்லா என்னைச் செதுக்கி
சிலை செய்த சிங்காரமவர்!

அருவமான மனதிற்கு
உருவம் கொடுத்த
குருவும் அவர்!

ஏளனப் பேச்சாளர்களுக்கு
அஞ்சி ஒடுங்கிய என்னை
மேடையற்றிய மேதையவர்!

எனக்காக கரகோசம்
கண்டு ஓரம் சென்று
சந்தோசமடைபவர்!

சபையில் என்னை
விளக்காக்கிய
வித்தகரும் அவரே!

அறிவு மட்டும்
கொடுப்பவரல்ல ஆசான்!

சுடர்விடும் பொழுது

தூண்டுகோளாகி
ஆனந்தம் அடைபவர்தான் ஆசான்...

பா.தேவி
இளங்கலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு

## பெண்மையின் நிலை

பரந்த இப்பாரினில் பேசும்
பாவை
நிறைந்த இவ்வுலகினிலே
நிலையான தேவதை
வயிற்றில் நம்மை ஏந்தியே
வலிகள் பல சுமப்பவள்
பயிற்சி ஏதும் இன்றியே
பக்குவமாய் என்னை வளர்ப்பவள்
நம் உயிரை சுமக்கும் தாயை
உலகைப் படைக்கும் தெய்வத்தை
பயிரை அழிக்கும் களைபோல்
நாசம் செய்வது ஏனோ?
கயிறைக் கட்டி வீட்டிலே
கதவடைப்பதும் ஏனோ?
அறிவில் சிறந்தவர்
பெண்களன்றோ
அவர்களை கல்வியில்

ஒதுக்கி வைப்பது நன்றோ!
பெண்ணின் வலியை உணருங்கள்.

சி.வினிதா
இளங்கலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு

## மகளிர்

பெண்ணுக்கு அழகு என்பது கண்
கவிதைக்கு அழகு பெண்ணின் பெருமை
பெண்களின் பெருமை அவர்களின்
சிறப்பு வீரம் குணம்
பூக்களுக்கு பெருமை சூடியது பெண்
அவர்களின் கருநிறமான கூந்தல்
மண்ணுக்கு பெருமையாக விளங்கியது.

தீபிகா
உயிர்த்தொழில் நுட்பவியல் முதலாமாண்டு

## வாழ்க்கை

வாழ்க்கையில் வெற்றி என்னும்
படிகளை நாம் தொடும் போது
அதில் தோல்வி என்னும் ஆயிரம்
குழிகள் இருக்கும்
குழியில் விழுந்து முயற்சிப்பவன்
விண்ணைத் தொடுவான்
குழியில் விழுந்து முயற்சிக்காதவன்
மண்ணைத் தொடுவான்

இது தான் வாழ்க்கை...

சு.விஜயா
இளங்கலைத் தமிழ் முதலாம் ஆண்டு

## போலி

ஒருசில போலியான
உறவுகளுடன்
பொய்யான வாழ்க்கை
வாழ்வதை விட
தனிமை
கொடுமையானது அல்ல.

ஆ.காயத்ரி
இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு.

## வகுப்பறை

நாங்கள் பள்ளி என்னும்
பாதையில் தவழ்ந்து
செல்லவில்லை,
குட்டிக்கரணமிட்டு
சேட்டைகளுடன் சென்றோம்!

எங்கள் வகுப்பறை
சன்னல்களும் சொல்லும்
நாங்கள் செய்யும்
சுட்டித்தனங்களை!

சுண்ணக் கட்டிகளும்
எழுத்துப் பலகைகளும் சொல்லும்
நாங்கள் எழுதிக் கிறுக்கிய
எழுத்துக்களை!
கருங்குயில்களே
எங்கள் வகுப்பறையைக்
கடந்து செல்லும் போது
காதடைத்துச் சென்றுவிடும்
எங்களின் பாடலைக் கேட்டு!

வகுப்பறையில்
இனம் புரியாத
மொழியென ஒதுக்கிய
ஆங்கில புத்தகங்கள் சொல்லும்
ஆசிரியரிடம் வாங்கிய அடிகளை!

ஆசிரியரோ
கணக்கே வராது என்ற

எங்களை தலையில்
கொட்டிக் கொட்டி

கண்களின் கண்ணீர்
சொட்ட சொட்ட
கற்பித்தனர் எங்கள்
கணிதப் பாடங்களை!

சின்னச் சின்ன சண்டைகளால்
வகுப்பறையில்
பிரிந்திடும் எங்களை
இணைக்கும் பாலங்களாய்
தேர்வறை...
எங்கள் பங்கீட்டுத்
தேர்வுத் தாள்கள்!

ஆய்வகப் பதிவேட்டில்
நாங்கள் வரையும்
உயிரியல்
ஓவியங்களுக்கு உண்மையான
கண்கள் இருந்தால்
அழுதுவிடும்
எங்களின் ஓவியத் திறமைகண்டு

சிட்டுக் குருவிகளாய்
சிறகடித்துப் பறந்த

காலங்கள் இப்பொழுது
கண் எதிரில்

மட்டுமே!

ச.ரம்யா
இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு.

## நட்பு

நண்பர்கள்
தவறு செய்தால்
மன்னித்து விடாதே
மறந்து விடு...
ஏனெனில் அவர்கள்
உன் உறவுகள் அல்ல
உயிரோடு கலந்த உணர்வுகள்

வெற்றியின் போது உன்னுடன்
இருப்பவன் நண்பன் அல்ல
தோல்வியிலும் உன்னுடன்
இருப்பவன் தான்
உண்மையான நண்பன்

சி.கோபிநாத்
இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு.

## மன்னித்து விடு

தமிழ்தாயே
உன் மைந்தன் என்னை
மன்னித்துவிடு
உணர்ச்சிகளை விற்று
தன்மானம் இழந்து
தலைகுனிந்து
உச்சரிப்பை மறந்து
உன்னை மறந்து
உன் பெயர் சொல்ல
வெட்கப்பட்டு வாழும்
மனிதர்கள் மத்தியில்
தமிழர்கள் மத்தியில்
நான்
வாழ்வதற்காக
என்னை
மன்னித்துவிடு.

ல.ரம்யா
இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு.

## நிதர்சனம்

கடந்த காலத்தை நினைக்காதே
கண்ணீர் தான் வரும்...
எதிர்காலத்தை எதிர்பார்க்காதே
பயம் தான் வரும்...

இந்த நிமிடம்

இந்த நொடிதான் உண்மை...

அதை அனுபவி

நல்லதையே நினை

நல்லதே நடக்கும்...

ஆ.காயத்ரி

இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## வயல்வெளி

காணும் இடம் எல்லாம் பச்சை நிறம்

இதை வர்ணிக்கத் தோன்றுதே

என் நெஞ்சின் ஒருபுறம்

பூக்களின் வண்ண நிறம்

வண்ணத்துப் பூச்சியைக் கவரச் செய்ததே...

இயற்கையின் அழகை ரசிக்கச் செய்ததே...

இந்த இயற்கையின் மடியில்

என்னைத் தவழச் செய்ததே...

கு.பிரகாஷ்

இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு.

## முதல் சந்திப்பு

சில்லென்ற காற்றில்
என்னை
மெல்லத் தழுவியது
உன் முதல்
பார்வையில்!
உன் கண்கள் என்ன
காந்தமா?
பார்த்த நொடியே
ஈர்த்து விட்டது
என்னை!

தேனைவிட இனிமை
உண்டோ இவ்வுலகில்?
என்ற கேள்வியைத்
தோற்கடித்தது
உன்னில் தோன்றிய
அமுத மொழிகள்!

அன்பினால் அலங்கரிக்கத்
தெரிந்த உனக்கு
புன்னகையால் பூஜிக்கவும்
தெரிந்ததை அறிந்தேன்
உன் சிரிப்பில்!

சிற்பியில் இருந்து தான்
முத்து பிறக்கும்
என்று அறிந்தேன்!

ஆனால் உன்
இதழ்களிலிருந்தும்
பிறக்கிறது என்று
அன்று தான் வியப்பில்
ஆழ்ந்தேன்!

என்னை பலமுறை
கோபப்படுத்த
தெரிந்த உனக்கு
அதை சமாளிக்கவும்
அறிந்தாய் உந்தன்
சிரிப்பினில்!

ரா.பாலசுப்பிரமணியம்
இளங்கலைத் தமிழிலக்கியம், மூன்றாமாண்டு.

## தாய்

பிறக்கும் போது உனக்கு
வலிக் கொடுத்ததால் என்னவோ
வலி ஏற்படும் போதெல்லாம்
உன்னையே அழைக்கிறேன்
அம்மா என்று....

எம்.பிரதீபா
I - B.Sc. BT B

## தியாகம்

தேனீக்கு தேன் கொடுக்க

பூ தன் வாழ்நாளை இழக்கின்றது!
குழந்தைக்கு உணவு கொடுக்க
தாய் தன் உணவை இழக்கிறார்!!
குழந்தைக்கு நிம்மதி கொடுக்க
தந்தை தன் நிம்மதியை இழக்கிறார்!!
மனிதனுக்கு மகிழ்ச்சி கொடுக்க
மரம் தன் உயிரை இழக்கிறது!!
அன்பு கொடுத்து தியாகம் செய்தால்
இவ்வுலகமே நலமாய் வாழும்....

எம்.பிரதீபா

I - B.Sc. BT B

## பெண்மை

பாசம் சுமந்தவள்
தங்கையாகிறாள்..
உணர்வு புரிந்தவள்
தோழியாகிறாள்...
நேசம் புரிந்தவள்
மனைவியாகிறாள்..
உயிர் சுமந்தவள்
தாயாகிறாள்...
பெண்ணின்றி அமையாது
இவ்வுலகு
பெண்மையைக் காப்போம்!!
பெண்மையைப் போற்றுவோம்!!

ந.பிரவீன்
இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

# இரத்த தானம்

மேகம் என்னும் தலைவன்
மழை என்னும் கொடையை
தானமாகத் தராமல் போயிருந்தால்
பூமியில்
நெற்பயிர்கள்
உயிர்வாழ முடியாது..
அதுபோல,
இங்கு
பூமியில் வாழும் மனிதன்
இரத்தம் என்னும் கொடையை
வேறொரு மனிதனுக்குத் தந்து
உயிரைக் காக்கிறான்..
தானத்தில் சிறந்தது கண் தானம்
அதைவிட சிறந்தது இரத்ததானம்
ஏனெனில்
கண் இல்லையெனினும்
உயிர்வாழ முடியும்..
உடலில் இரத்தம் எனும் குருதி
இல்லையெனில்
உயிர்வாழ முடியாது!!
ஆகவே
இரத்த தானம் செய்வோம்!!

உயிர் காப்பதில் பங்கெடுப்போம்!!

ப.காயத்ரி
I B.Sc BC

# பொது அறிவு

## வினா - விடை

1. தமிழ்நாட்டின் மிகப்பெரிய கட்டணமில்லா நூலகம் எது? - **கன்னிமாரா நூலகம்**
2. தமிழில் வெளிவந்த முதல் செய்தித்தாள் எது? – **சுதேசமித்திரன்**
3. உலகில் முதல் பெண் எழுத்தாளர் யார்? – **சாப்போ**
4. நியூ இந்தியா நாளிதழை வெளியிட்டவர் யார்? – **அன்னிபெசன்ட் அம்மையார்**
5. விண்வெளிப் பயணம் செய்த முதல் இந்தியர் யார்? – **ராகேஷ் சர்மா**
6. விக்ரம் சாராபாய் விண்வெளி ஆராய்ச்சி மையம் எங்குள்ளது? – **திருவனந்தபுரம்**
7. வாசனையால் தன் உணவை அறியும் பறவை எது? – **கிவி**
8. உணவை கழுவிச் சாப்பிடும் விலங்கு எது? – **ரக்கூன்**
9. குங்குமப் பூ எந்த நாட்டில் தோன்றியது? – **பாரசீகம்**
10. உலகின் முதல் குடியரசு நாடு எது? - **ஸ்பார்ட்டா**
11. கண்ணிலே காது உடைய பிராணி எது? – **பாம்பு**
12. சைவ சித்தாந்த சாத்திர நூல்களின் எண்ணிக்கை? – **14**

13. விண்வெளிக்கு முதன் முதலாகச் சென்ற உயிரினம் எது? – **லைகா எனும் நாய்.**

செ.சரண்யா

இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## பொது அறிவு வினா - விடை

1.கடலின் ஆழத்தைக் கண்டறியும் கருவி எது? – **பாத்தோமீட்டர்**

2.புயல் வருவதை முன்பே அறிவிக்கும் கருவி எது? – **மைக்ரோ சீஸ்மோகிராப்**

3.கப்பலின் வேகத்தை அளக்க உதவும் கருவியின் பெயர் என்ன? – **நாட்**

4.கூட்டு நுண்ணோக்கியை உருவாக்கியவர் யார்? – **ராபர்ட் ஹீக்**

5.அச்சு கோக்கும் இயந்திரத்தை உருவாக்கியவர் யார்? – **டாக்டர் சர்ச்**

6.இரண்டு முறை நோபல் பரிசு பெற்ற பெண் யார்? – **மேரிகியூரி**

7.அணுவைப் பிளந்தவர் யார்? - **ரூதர்.்.போர்டு**

8.எலக்ட்ரானைக் கண்டுபிடித்தவர் யார்? – **ஜே.ஜே.தாம்சன்**

9.ஆப்பிளில் உள்ள அமிலம் எது? – **மாலிக் அமிலம்**

10.எப்சம் என்பதன் வேறுபெயர் என்ன? – **மக்னீசியம் சல்பேட்**

11.சலவை சோடாவின் வேதிப்பெயர் என்ன? – **சோடியம் பை கார்பனேட்**

12.பாலில் உள்ள அமிலம் எது? – **லாக்டிக் அமிலம்**

13.இந்திய வேதியியல் ஆய்வகம் எங்குள்ளது? – **புனே**

14.ஆக்ஸிஜனைக் கண்டுபிடித்தவர் யார்? – **பிரிஸ்ட்லி**

15.இரசாயனங்களின் மன்னன் எனப்படுவது எது? – **கந்தக அமிலம்**

சே.வினிதா
இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## பொன் மொழிகள்

❖ அகந்தை முன்னே செல்லும், அவமானம் பின்தொடரும். – **பில்கேட்ஸ்**

❖ வெற்றி என்பது நிரந்தரமல்ல
தோல்வி என்பது இறுதியானதுமல்ல – **எம்.ஜி.ஆர்**

❖ மனிதனுடைய இதயத்தைத் திறப்பது எது?
அவனை அறியாமல் எழும் சிரிப்புதான் - **ஷேக்ஸ்பியர்**

❖ கோழைகள் எப்போதும் வெற்றியடைய முடியாது. – **கார்லைல்**

❖ உன்னால் செய்ய முடியாததை, கடைபிடிக்க முடியாததை மற்றவரிடம் எதிர்பார்க்காதே – **சுவாமி விவேகானந்தர்**

❖ வெற்றி என்பது ஒவ்வொரு முறையும் இடத்தைப் பெறுவது என்று பொருள் அன்று வெற்றி பெற்றாய் என்றால் உன் செயல்பாடு சென்ற முறையை விட இம்முறை சிறப்பாக அமைந்துள்ளது என்று பொருள் - **சேகுவாரா**

❖ சிறுசிறு பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு செய்தால் எந்த கவலையும் மிகக் கடினமானதாக இருக்காது. – **வைஷ்ணவ தேவி**

❖ ஒரு மனிதனின் நடத்தையை அறிய அவன் கையில் அதிகாரத்தைக் கொடுத்துப் பாருங்கள் - **சுப்ரமணிய பாரதியார்**

❖ பணத்தின் உண்மையான மதிப்பு பிறரிடம் கடன் கேட்கும் போதுதான் தெரியும். – **மகாத்மா காந்தி**

செ.சரண்யா
இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## உலக நடன தினம் - ஏப்ரல் 29

நடனம் மிகச்சிறந்த உடற்பயிற்சியாகவும் மன இறுக்கத்தைத் தளர்த்தும் மருந்தாகவும் செயல்பட்டு உடல், மனதிற்கு உற்சாகமூட்டுவதாக உள்ளது. தேவராட்டம், தொல்லு, குனிதா, தண்டரியா, கரகம், கும்மி, கூட்டியாட்டம், படையணி, கோலம், இலவா போன்றவை தென்னிந்திய சிறப்பு நடனங்கள். மேலும் அவ்வந்த மாநிலங்களுக்குரிய சிறப்பு நடனங்களும் உள்ளன. அவையாவன:

**தமிழ்நாடு** : பரதநாட்டியம், கோலாட்டம், கும்மியாட்டம், தெருக்கூத்து.

**கேரளா** : சாக்கியார் கூத்து, கதகளி, மோகினியாட்டம், துள்ளல், தாசியாட்டம், கூடியாட்டம், கிருஷ்ணா ஆட்டம், ஜட்டா – ஜட்டின், லாகூய், நாச்சாரி

**கர்நாடகா** : யஷகானம்

**ஆந்திரா** : குச்சிப்புடி, கோட்டம், வீதி பகவதம்

**ஒடிஸா** : ஒடிசி

**மணிப்பூர்** : மணிப்புரி, லாயஹ ரோபா

**பஞ்சாப்** : பாங்ரா, கிட்டா

**பீகார்** : பிதேஷியா

**அஸ்ஸாம்** : பிகு

**ஜம்மு காஷ்மீர்** : சக்ரி, ரூக்ப்

முனைவர் ப.பிரதீபா

தமிழ் உதவிப் பேராசிரியர்

## கவிதைகள்

### நட்பு

ஆயுள் முழுதும் உன்னுடன் இருக்கும்
ஆயிரம் இலைகளாக அல்லாமல்
ஒரு நாளட பூக்கும் பூவாய் இருந்து
உன்னை அழகுப் படுத்த
ஆசைப்படுகிறேன் என்றும் உன் தோழியாக!!

எம்.பிரதீபா

## பிரிவு

வெவ்வேறு திசைகளிலிருந்து
பறந்து வந்தோம் நாங்கள்!
இன்று ஒரே கூட்டில்
வாழும் பறவைகளானோம் நாங்கள்!
ஒன்றாக சுற்றிய காலங்களில்
எத்தனை இன்ப
துன்பங்களை
எல்லாம் கண்டு
துவண்டு விடாத நாங்கள்!
இன்று
கலங்கி நிற்கிறோம்
பிரியப் போகும் காரணத்தை நினைந்து..

ஆ.காயத்ரி
இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## புத்தகப் பொன் மொழிகள்

- ❖நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னை சந்திப்பவனே என் தலைசிறந்த நண்பன - **ஆப்ரகாம் லிங்கன்**
- ❖ போதும் என்று நொந்து போய், புதுவாழ்வு தேடுகிறீர்களா... ஒரு புத்தகம் வாங்கி வாசிக்கத் தொடங்கு - **இங்கர்சால்**
- ❖ புரட்சிப் பாதையில் கைத்துப்பாக்கிகளைவிட பெரிய ஆயுதங்கள் புத்தகங்களே – **லெனின்**
- ❖ சில புத்தகங்களைச் சுவைப்போம்.. சிலவற்றை அப்படியே விழுங்குவோம்.. சில புத்தகங்களை மென்று ஜீரணிப்போம் - **பிரான்சிஸ் பேக்கன்**
- ❖ உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ அதுபோல மனப் பயிற்சிக்கு வாசிப்பு – **சிக்மண்ட் பிராய்ட்**
- ❖ ஒரு நூலகம் திறக்கப்படும் போது ஊரில் ஒரு சிறைச்சாலை மூடப்படும் - **சுவாமி விவேகானந்தர்**
- ❖ வேறு எந்த சுதந்திரமும் வேண்டாம். சிறையில் புத்தக வாசிப்பு மட்டும் வேண்டும் - **நெல்சன் மண்டேலா**
- ❖மனிதனின் ஆகப் பெரிய கண்டுபிடிப்பு புத்தகம் - **ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்**

முனைவர் ப.பிரதீபா
தமிழ் உதவிப் பேராசிரியர்